1977-80, 1980-84, 1985-38 ஆகிய ஆண்டுகளில் பேராவூரணித் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பேரவை உறுப்பினராகவும், 1-7-1983 முதல் 21-10-1986 வரை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராகவும், எளிமையும், இனிய பண்பும் செயல் திறனும் கொண்டு பணியாற்றிய வருமான திரு. எம்.ஆர். கோவேந்தன் அவர்கள், 26-5-2001 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

3. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்:

1. திரு. கா.பூ. முனுசாமி
2. திரு. பி.ஆர். சுந்தரம்
3. திரு. ஏ. பாப்பா சுந்தரம்
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்
5. திருமதி டி. யசோதா
6. திரு. ஐ. கணேசன்